

வேலூர் மாவட்ட போலீஸ் துறை மற்றும் நியூ பவுண்டேஷன் இணைந்து நடத்திய, போலீஸ் துறையில் பணியாற்றி வரும் நபர்கள் சப் இன்ஸ்பெக்டர் தேர்வு எழுதுவது குறித்த பயிற்சிப் பட்டறையில், டிஐஜி ஆனி விஜயா ஆலோசனை வழங்கினார். அருகில் எஸ்பி ராஜேஷ் கண்ணன் உட்பட பலர்.

# திறமையை பயன்படுத்தி முன்னேற திருப்புமுனை தேவை: டிஐஜி பேச்சு

வேலூர், மே 23–

தமிழக போலீஸ் துறையில் 444 சப் இன்ஸ்பெக்டர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், அதை பூர்த்தி செய்ய, வரும் ஜூன் மாதம் தேர்வு நடக்கிறது. இதில் வேலூர் மாவட்டத்தில் போலீசில் பணியாற்றி வரும், சப் இன்ஸ்பெக்டர் பணியிடத்துக்கு கீழே உள்ள நபர்கள் ஆயிரத்து 800 பேர் பங்கேற்க உள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிப்பட்டறை, வேலூர் மாவட்ட போலீஸ் துறை மற்றும் நியூ பவுண்டேஷன் இணைந்து நேற்று நடத்தின. போலீஸ் திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, டிஐஜி ஆனி விஜயா தலைமை வகித்தார். எஸ்பி ராஜேஷ் கண்ணன், கூடுதல் எஸ்பி சுந்தரமூர்த்தி, டிஎஸ்பி திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நியூ பவுண்டேஷன் நிறுவனர் சங்கர் வரவேற்றார். பயிற்சியை தொடங்கி வைத்து டிஐஜி ஆனி விஜயா பேசியது:

இங்கு வந்துள்ளவர்களில் 99 சதவீதம் பேர், டிகிரி முடித்துள்ளீர்கள். உங்கள் எல்லோருக்கும் திறமை உண்டு. ஆனால், அதை எங்கு பயன்படுத்தினால், முன்னேற முடியும் என்பதற்கு சில திருப்பு முனைகள் நமக்கு தேவைப்படுகிறது. அது போல திருப்பு முனைதான், இந்த சப்இன்ஸ்பெக்டர் தேர்வு. இதை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும்.

வேலூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்து 800 பேர் தேர்வில் பங்கேற்க உள்ளனர். இதே போல தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பேர் பங்கேற்பார்கள். அதனால் நன்கு படித்து, தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகள்'.

இவ்வாறு டிஐஜி பேசினார். நியூ பவுண்டேஷன் செயலாளர் ஜோசன் ரஞ்சித் நன்றி கூறினார்.